# நாடாளுமன்றில் கடும் வாக்குவாதம் இரு உறுப்பினர்கள் வெளியேற்றம்!



நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக, சபை அமர்வு 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற அமர்வுகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது குழப்பத்தை விளைவித்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோரை சபையிலிருந்து வெளியேறுமாறு சபாநாயகர் அறிவித்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெற்ற வாய்மூலப் பதில் நேரத்தில் ஏற்பட்ட கடும் அமளி காரணமாக பிரதி சபாநாயகர் நாடாளுமன்றத்தை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு சட்டத்தின் கீழான ஒழுங்குமுறைகள், ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான உத்தரவு, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் வர்த்தமானி அறிவித்தல் குறித்து இன்று நாடாளுமன்ற விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது. 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 04 புதன்கிழமை 23.08.2023 கதிர் 56

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

## முற்போக்குக் கூட்டணி முறிகிறதா?



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதான கட்சியாகவுள்ள தொழிலாளர் தேசிய சங்கம் அடுத்தாண்டு மேதினத்தைத் தனியாக நடத்த ஆலோசித்து வருவதாகவும் இதுகுறித்து அக்கட்சியின் உயர்பீடம் தீர்மானம் எடுத்துள்ளதாகவும் தகவல் ஒன்று கசிந்துள்ளது.

தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்து கடந்த 2015 ஆம் ஆண்டு தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற கூட்டணியை உருவாக்கியிருந்தன.

தமிழ் முற்போக்குக் கூட்டணி உருவாக்கப்பட்டதன் பின்னர் இந்த மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்தே மேதினக் கூட்டங்களை நடத்தியிருந்தன. கடந்த ஆண்டும் தலவாக்கலையில் பிரமாண்டமான மேதினக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த நிலையில், அடுத்தாண்டு மேதினக் கூட்டத்தை தனியாக நடத்தும் எண்ணத்தில் தொழிலாளர் தேசிய சங்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது. (க)

## மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் செப்டெம்பரில் ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் பேரவையின் உயர ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடர் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தொடர் குறித்த ஒழுங்கமைப்புக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற இருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் கூட்டத்தொடரின்போது ஏற்கனவே இலங்கை தொடர்பில் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51 கீழ் 1 தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் நடைமுறைப்படுத்தலில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. (க)

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் பிக்குகளுக்கு


### எதிராக மட்டக்களப்பில் போராட்டம்



மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் பிக்குகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

மட்டக்களப்பு மயிலத்தமடு பகுதியில் பேரினவாதிகளால் ஊடகவியலாளர்கள், சர்வ மதத் தலைவர்கள், குடிசார் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் தடுத்து வைத்தமையை கண்டித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 2 ➤

## அமெரிக்கத் தூதர் ஜூலி சுங் யாழ்ப்பாணத்துக்கு வருகை



இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சுங் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக இன்று யாழ்ப்பாணத்துக்கு வந்த அமெரிக்கத் தூதர், பல்வேறு தரப்புக்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

யாழ்ப்பாணம் பொது சன நூலகத்துக்கும் அவர் இன்று காலை வருகைதந்து பார்வையிட்டார்.

## நுவரெலியா பொது வைத்தியசாலையில் சாதாரண சத்திரசிகிச்சைகள் நிறுத்தம்!

### மருந்துத் தட்டுப்பாடே காரணமாம்

மயக்க மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இன்று முதல் அமுலாகும் வகையில் சாதாரண சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கச் சம்மேளனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அத்துடன், அவசர சத்திரசிகிச்சைகள் மாத்திரம் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சுகாதார தொழிற்சங்க சம்மேளனங்கள் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் ஐசோப்ளோரின் மற்றும் சியோப்ளோரின் 2 ➤

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியாகும் திகதி அறிவிப்பு!

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் இந்தத் தகவலைக் கூறியுள்ளார். (க)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் மாபெரும் போராட்டத்திற்கு அழைப்பு!



வடக்கு கிழக்கில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஒன்றிணைத்து எதிர்வரும் 30 ஆம் திகதி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும், என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் இன்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை, வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து மன்னாரில் மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம்.

இந்தப் போராட்டமானது, மன்னார் 'சதொச' மனிதப் புதைகுழியிலிருந்து ஆரம்பித்து, மன்னார் நகர சபைப் பொது விளையாட்டு மைதானத்தை சென்றடையும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி 14 வருடங்களாக நீதிக்காகப் போராடும் தாய்மார்கள் நடத்தவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்த் தேசியத்துக்காகப் பணிபுரியும், தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் அனைவரும் எங்களுடன் கைகோர்க்க வேண்டும். ஐந்து வயது முதல் 70 வயது வரை உள்ளவர்கள் அனைத்து தரப்பினரும் எங்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.


காணாமல்போன உறவுகளின் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் எமது பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ், நஷ்ட ஈடு வழங்க அரசாங்கம் முயல்கிறது. ஆனால், எமக்கு நீதிதான் வேண்டும்.

எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? என்ற உண்மையைக் கேட்கின்றோம். அதனால் தான் இதுவரை இலங்கை அரசை நம்பவில்லை. இனியும் நம்பப் போவதில்லை. இவ்வாறானதொரு சம்பவம் இலங்கையில் நடைபெறவில்லை என்பதை உலகுக்குக் காட்டவே இந்த அரசாங்கம் உலகத் தரப்பினரின் மனதைக் கவரும் வகையில் சலுகைகளை கொடுக்கிறது.

அதேபோன்று ஓ.எம்.பி மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுகளைக் கொண்டு வந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார்களின் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யவும் நினைக்கிறது. எது எப்படி இருந்தாலும் எங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

எனவே, பல்கலைக்கழக மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என அனைவரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு எமது உறவுகளுக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும், என்று மனுவல் உதயச்சந்திரா வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## இடிந்து வீழ்ந்தது திருகோணமலை கடற்படை முகாம் துறைப் பாலம்



திருகோணமலை கடற்படை முகாமில் உள்ள இறங்குதுறையின் ஒரு பகுதி நேற்று இடிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்த நிலையில், பாடசாலை மாணவர் ஒருவர் உட்பட மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 15 பேர் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலம் இடிந்து விழுந்தமைக்கான காரணம் இது வரை வெளியாகவில்லை எனவும் விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## நாடாளுமன்றில் கடும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் இன்று காலை நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இதன்போது கேள்வி பதிலுக்கான நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்கு ஆளும் தரப்பில் இருந்து உரிய பதில் வழங்கப்படவில்லை.

இருப்பினும் அவர் தொடர்ந்தும் தனது கேள்வியை எழுப்பிய நிலையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் வழங்குவதற்கு சபையில் இல்லை என்பதனால் நேரத்தை வீண்விரயம் செய்ய வேண்டாம் என ஆளும் கட்சியின் பிரதம கொறடா, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருந்தார்.

இருப்பினும் இந்தக் கேள்விக்குப் பதில் வழங்க வேண்டும், என நளின் பண்டார தெரிவிக்க பிரதி சபாநாயகர் அதற்கு அனுமதி வழங்கியபோதும், பிரதமர் தினேஷ் குணவரத்னவும் நேரத்தை வீண்விரயம் செய்ய வேண்டாம் என்றும் சபையை ஒத்திவைக்குமாறு பிரதி சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து நளின் பண்டார கேள்வியெழுப்பியபோது அவரது ஒலிவாங்கியின் இணைப்பு துண்டிக்கப்பட்டது, இதனைத் தொடர்ந்து கடும் வாக்குவாதம் இடம்பெற்றதால் நாடாளுமன்ற அமர்வை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக பிரதி சபாநாயகர் அறிவித்தார். (க,04)

## வலிந்து காணாமல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 11 மணியளவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் மட்டக்களப்பு மாவட்ட சங்கத் தலைவி அமலநாயகி தலைமையில் மட்டக்களப்பு திருமலை வீதியில் அமைந்துள்ள அமெரிக்க மிஷன் மண்டபத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் இடம் பெற்றது.

கடந்த சில வருடங்களாக மட்டக்களப்பின் எல்லைக் கிராமங்கள், அரசாங்கத்தின் துணையுடன் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இதனால், பண்ணையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் மாதவனை மயிலத்தமடு பகுதியில் உள்ள பண்ணையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களின் அழைப்பின் பேரில் மயிலத்தமடுவிற்கு சென்ற ஊடகவியலாளர்கள், சர்வ மதத் தலைவர்கள், குடிசார் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் தடுத்து வைக்கப்பட்டதுடன் அச்சுறுத்தலுக்கும் உட்பட்டனர்.

ஊடகவியலாளர்களின் புகைப்படக் கருவிகளிலிருந்து படங்கள் அழிக்கப்பட்டன. இச்செய்தி வெளிவரக்கூடாது எனக்கூறி, வெற்றுத்தாளில் கையெழுத்துப் பெற்றமை ஊடகத் துறைக்கு விடுக்கப்பட்ட மிகப்பெரும் சவாலாகும்.

இராணுவத்தினராலும் புலனாய்வுப் பிரிவினாலும் தமிழ் ஒட்டுக் குழுக்களாலும் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் ஊடகவியலாளர்கள் உட்பட சமூகச் செயற்பாட்டாளர்கள் அனைவரும் தற்போது இனவாதம் கொண்ட காவி உடைதரித்த பிக்குகளினாலும் வன்முறையாளர்களாலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகத் தொடங்கியுள்ளனர்.

அதேவேளை, பெரும் மதிப்புக்குரிய மதத்தலைவர்களை அச்சுறுதியமையும் மிகவும் கண்டிக்கத் தக்கது. எனவே, சர்வதேசம் உடனடியாக இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சர்வதேச நீதிப் பொறிமுறைக்குள் இலங்கையை உட்படுத்தி, சர்வதேச நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்டவர்களை நிறுத்த வேண்டும். மேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், என போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## நுவரெலியா பொது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற மயக்கமருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக குறித்த சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பீ.மெதிவத்த தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக, சாதாரண சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாளை காலை 8 மணிமுதல் நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளிலும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக நிறைவுக்காண் தாதி மருத்துவ சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது. (க)

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
**maalaikkathir@gmail.com**



# மிசோரத்தில் புகையிரதப் பாலம் இடிந்து விழுந்தது - 17 பேர் பலி!



இந்தியாவின் மிசோரமின் சாய்ரங் பகுதிக்கு அருகே புதிதாகக் கட்டப்பட்டு வந்த புகையிரதப் பாலம் இடிந்து விழுந்த விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

ஐசாலிலிருந்து 21 கிலோமீற்றர் தொலைவில் புதிதாக புகையிரதப் பாலம் கட்டப்பட்டு வந்தது. இன்று காலை 10 மணியளவில் இந்தப் பாலம் இடிந்து விழுந்த சமயத்தில் சுமார் 35 முதல் 40 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

பாலம் விழுந்த இடிபாடுகளில் சிக்கிய 17 பேரை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர். மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் பணி நடைபெற்று வருகின்றது. (04)

# இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல் பலி இந்த ஆண்டில் அதீதமாக உயர்வு!



இந்த ஆண்டில் இஸ்ரேலியப் படையினருக்கும், பாலஸ்தீன ஆயுதக் குழுவினருக்கும் இடையிலான மோதலில் பலியானவர்களின் எண்ணிக்கை கடந்த 18 ஆண்டுகளில் இல்லாத புதிய உச்சத்தைத் தொட்டுள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து மேற்கு ஆசிய நாடுகளுக்கான ஐ.நா. தூதர் டார் வெனெஸ்லாண்ட் தகவல் வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலை நிறுத்துவதற்கான அரசியல் தீர்வைக் காண்பதற்கு சில அடிப்படை பிரச்னைகள் களையப்பட வேண்டும். எனினும், அதற்கான முயற்சிகளில் முன்னேற்றம் இல்லாதது அபாயகரமான வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த வெற்றிடம் முழுவதையும் மத அடிப்படைவாதிகளும், தீவிர வலதுசாரிகளும் நிரப்பியுள்ளனர்.

இதன் விளைவாக, இந்த ஆண்டில் மட்டும் இரு தரப்பிலும் நடத்தப்பட்ட பரஸ்பரத் தாக்குதலில் 200க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களும், சுமார் 30 இஸ்ரேலியர்களும் உயிரிழந்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையில் அமைந்துள்ள தற்போதைய கூட்டணி அரசு, அந்த நாட்டின் வரலாற்றிலேயே மிகத் தீவிரமான வலதுசாரி அரசு என்று கூறப்படுகிறது. பாலஸ்தீன விவகாரத்தில் அந்த அரசு மிகக் கடுமையாக நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

தங்கள் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளை வேட்டையாடுவதாகக் கூறி, மேற்குக் கரைப் பகுதியில் இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்துவதும், அதற்குப் பதிலடியாக இஸ்ரேலியர்கள் மீது பாலஸ்தீனர்கள் தாக்குதல் நடத்துவதும் இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து அதிகரித்து வருகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (04)

# இங்கிலாந்து அருங்காட்சியகத்தில் மதிப்புமிக்க பொருள்கள் திருட்டு!



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உலகப் புகழ் பெற்ற பிரிட்டன் அருங்காட்சியகத்தில் விலைமதிப்புமிக்க பொருள்கள் திருடப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டன் அருங்காட்சியகத்தில் பழங்கால நகைகள், வைரக்கற்கள், கண்ணாடிகள், போன்ற பல்வேறு பொருள்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவ்வப்போது இங்கு கண்காட்சிகள் நடத்தப்படுவது உண்டு. ஆனால் சமீப காலமாக அங்கு கண்காட்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை.

இந்த நிலையில், தற்போது அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் விலைமதிப்புமிக்க பொருள்கள் திருடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

மில்லியன் கணக்கான ரோமானியப் பொருள்கள் உள்பட சுமார் 1,500 க்கும் மேற்பட்ட பொருள்கள் மாயமாகி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு 50 ஆயிரம் பவுண்ட்ஸ்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணை நடைபெற்றுவரும் நிலையில், அருங்காட்சியகத்தின் மூத்த கண்காணிப்பாளர் பீட்டர் ஹிக்ஸ் என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட பொருள்களை மீட்டெடுக்கத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அருங்காட்சியகத்தின் தலைவர் கூறியுள்ளார். (04)

# பாகிஸ்தான் அதிபரின் தனிச்செயலாளர் நீக்கம் தன்னிச்சையாகச் செயற்பட்டதாக குற்றச்சாட்டு



பாகிஸ்தானில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து இடைக்காலப் பிரதமராக அன்வர் உல்ஹக் பதவி வகித்து வருகிறார்.

இந்தநிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பு அதிபர் ஆரிப் ஆல்வியின் ஒப்புதலுக்கு 2 சட்டத் திருத்த மசோதாக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அரசு ரகசிய சட்டதிருத்த மசோதா, ராணுவ சட்டத் திருத்த மசோதா என்னும் இந்த இரு மசோதாக்களுக்கும் அதிபர் ஆல்வி ஒப்புதல் வழங்கியதாக தகவல்கள் வெளியாகின.

இந்த 2 முக்கிய சிக்கல்கள் நிறைந்த மசோதாக்களுக்கும் எவ்வித எதிர்ப்புமின்றி ஒப்புதல் அளித்தது தொடர்பாக அதிபர் ஆல்வி மீது சர்ச்சை எழுந்தது. இவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட விடயத்தை அதிபர் ஆரிப் ஆல்வி திட்டவட்டமாக மறுத்து வருகிறார்.

இந்த நிலையில், அதிபர் ஆல்வியின் தனிச்செயலாளர் வாக்கர் அகமட் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அதிபரின் உத்தரவைப் பின்பற்றி சர்ச்சைக்குரிய மசோதாக்களை திருப்பி அனுப்பாமல் காலம் தாழ்த்தியதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பாகிஸ்தான் அதிபர் மாளிகைத் தரப்பில் கூறப்படுகிறது.

எனினும், பதவிப் பறிப்பு குறித்து வாக்கர் அகமட் நீதிமன்றை நாடவுள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகி உள்ளன. (04)



# ஆபிரிக்க யூனியனிலிருந்து நைஜர் விலக்கப்பட்டது

ராணுவக் கிளர்ச்சி நடைபெற்றுள்ள நைஜரில் ஜனநாயக அரசு மீண்டும் அமைக்கப்படும் வரை அந்த நாட்டை தங்களது கூட்டமைப்பிலிருந்து விலக்கிவைப்பதாக ஆபிரிக்க யூனியன் அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆபிரிக்க யூனியன் கூட்டமைப்பிலிருந்து நைஜர் விலக்கிவைக்கப்படுகிறது. அந்த நாட்டில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மீண்டும் அமைக்கப்படும் வரை இந்த நிலை தொடரும். ஆபிரிக்க யூனியன் அமைப்பைச் சேர்ந்த உறுப்பு நாடுகளும் சர்வதேசமும் நைஜர் ராணுவத்தின் ஆட்சிக் கவிழ்ப்பை அங்கீகரிக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜர், பிரான்ஸ் கொலனி ஆதிக்கத்திலிருந்து கடந்த 1960 ஆம் ஆண்டு விடுதலை பெற்றதிலிருந்து அங்கு ராணுவ ஆட்சியும், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் ஆட்சியும் மாறி மாறி நடைபெற்று வந்தன.

இந்த நிலையில், கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் முகமது பஸூம் வெற்றி பெற்று நாட்டின் பத்தாவது அதிபராக 2021 இல் பதவியேற்றார். நைஜரில் அமைதியான முறையில் நடைபெற்ற முதல் ஆட்சி மாற்றம் அது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், முகமது பஸூமின் ஆட்சியை ராணுவத்தின் ஒரு பிரிவினர் கடந்த மாதம் 26ஆம் தேதி கவிழ்த்தனர். பஸூம் சிறைப்பிடிக்கப்பட்டார். இந்த ராணுவக் கிளர்ச்சியை முன்னின்று நடத்திய தளபதி அப்துரஹ்மேன் சியானி நாட்டின் தலைவராக தன்னை அறிவித்துக்கொண்டார். இதற்கு, ஐ.நா., ஐரோப்பிய யூனியன், ஆபிரிக்க யூனியன் உள்ளிட்ட அமைப்புகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு ஆபிரிக்க யூனியன் முதல்முறையாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)




# கிளிநொச்சியில் பாரம்பரிய உணவு வகைகளின் கண்காட்சி – விற்பனை

கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும், கிறிசலிஸ் நிறுவனமும் இணைந்து நடத்தும் பாரம்பரிய உணவு வகைகளின் கண்காட்சியும் விற்பனையும் கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைந்துள்ள பசுமை பூங்கா வளாகத்தில் இன்றையதினம் இடம்பெற்றது.

உள்ளூர் உற்பத்தியையும் உற்பத்தியாளர்களின் சுயதொழிலினையும் மேம்படுத்துவதனூடாக அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதனை நோக்காகக் கொண்டு குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்போது, எமது பாரம்பரிய நஞ்சற்ற உணவு வகைகளைக் காட்சிப்படுத்தும் முகமாக சுமார் 28 விற்பனைக்கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆரம்ப நிகழ்வில் மாவட்டச்செயலர் ரூபவதிகேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் ஏற்பாட்டுக் குழுவினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (02)

# நல்லூர் மூத்த விநாயகர் ஆலய பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிசேகம்



நல்லூர் மூத்த விநாயகர் ஆலய பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிசேகம் இன்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, விநாயகப் பெருமான் வீதி வலம் வந்தார்.

அதனையடுத்து, நாட்டியாஞ்சலி நிகழ்வு இடம்பெற்று, பிரதான கும்பங்கள் வீதி வலம் வந்து பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிசேகப் பெருவிழா இடம்பெற்றது.

இந்தக் கும்பாபிசேகப் பெருவிழாவில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். (01)




# கைக்குழந்தையுடன் குளத்தில் குதித்த தாய்

தாய் ஒருவர் தனது ஒரு வயது மகளுடன் குளத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லோகி தோட்டத்தில் வசித்து வந்த 26 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயும் அவரது ஒரு வயது மகளுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

உயிரிழந்த பெண், தானும் குழந்தையும் தனது கணவர் மற்றும் கணவரின் குடும்ப உறுப்பினர்களால் துன்புறுத்தப்படுவதாக மூன்று பக்க கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதம், திருமணச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை தனது வீட்டிற்கு அருகில் உள்ள குளத்தின் கரையில் வைத்துவிட்டு, இன்று காலை தனது சிறு குழந்தையுடன் குளத்தில் அவர் குதித்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

குளத்தில் தாயின் சடலம் மிதப்பதாகவும், குழந்தையின் சடலத்தைத் தேடிவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (04)

# இன்று வீரபத்திரர் கும்பாபிஷேகம்




இன்று புதன்கிழமை காரைதீவு வீரபத்திரர் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டு இறையருளைப் பெறத் திரண்டிருந்தனர்.

(படம்- வி.ரி.சகாதேவராஜா)

# பிறிட்டிஷ் கவுன்சில் ஜஈஎல்ரிஎஸ் பணிப்பாளர் ஸ்ரொமினி கட்சன் - யாழ்ப்பாணம் வந்தார்

வட பகுதி மாணவர்களின் ஆங்கில அறிவை மேம் படுத்துவதில் பிரிட்டிஷ் கவுன்சில் எவ்வாறு உதவி புரிகின்றது என்பது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ககில்ஸ் அலுவலகத்தில் இடம்பெற்றது

குறித்த கலந்துரையாடலின்பின் கருத்து தெரிவித்த பிரிட்டிஸ் கவுன்சில் ஜஈஎல்ரிஎஸ் பரீட்சைப் பணிப்பாளர் ஸ்ரொமினி கட்சன், கடந்த 2019 ம் ஆண்டில் இருந்து கொரோனா நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து பலர் புலம்பெயர்ந்த நாடுகளுக்குச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது .

அப்படிச் சிலருக்கு இந்த நாட்டில் இருந்து வெளி யேறுவதற்கான தேவையுள்ளது. அவ்வாறு செல்வோர் கட்டாயமாக ஆங்கில மொழியில் தேர்ச்சி உள்ளவர் களாக இருக்க வேண்டும். ஆங்கில மொழியானது



கட்டாயமானது.

அத்தோடு வேறு நாடுகளில் வேலை தேடுபவர்களும் உள்ளார்கள். அவ்வாறானவர்கள் ஜஈஎல் ரிஎஸ் ஆங்கிலக் கற்கையினைக் கற்று பரீட்சையில் சித்தி யெய்தி வெளிநாடுகளுக்கு செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாக, இந்தப் பயிற்சிநெறியானது ஆங்கில மொழியினை விருத்தி செய்வதற்காகவும் ஆங்கில மொழித் திறன் தொடர்பான தகைமையினை அறியவும் உருவாக்கப்பட்டது.

புலம்பெயர்கின்ற அனைவருக்கும் இந்த மொழிப் பரீட்சையானது முக்கியமானது. இலங்கையில் பிரிட்டிஷ் கவுன்சில் பல நிறுவனங்களுடன் இணைந்து இந்தச் சேவையினை செய்து வருகின்றது. பலர் பயனடைந்து வருகின்றார்கள்.

அந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே நான் இன்று யாழ்ப்பாணத்திற்கு வந்து, ஜஈஎல்ரீஎஸ் கற்கை நெறியினை செயற்படுத்து வோர் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி அவர்களுடன் கலந்துரையாடியுள்ளேன், என்றார். (O1)

## நெல் உலரவைக்கும் களமாக மாறிவரும் பிரதான வீதிகள்!



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச வீதிகள் எல்லாம் தற்பொழுது நெல் உலர வைக்கும் களமாக மாறி வருகின்றன என்று பயணிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அறுவடையின் பின்னர் நெல்லை உலர வைத்து சேமிக்கின்ற வழக்கம், கடந்த காலங்களில் வயல்களிலும் மைதானங்களிலும் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

ஆனால், அண்மைக் காலமாக பெரும்பாலும் பிரதான வீதிகளில் இந்த உலர வைக்கும் செயன்முறை தொடர்கிறது.

இந்தச் செயற்பாடானது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்றது என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.



## அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் வருடாந்த மாநாடு

(அம்பாறை நிருபர்)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் ஆறாவது வருடாந்த மாநாடும், பொதுக் கூட்டமும் ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று எய்ம்ஸ் சர்வதேசப் பாடசாலை கேட்போர் கூடத்தில், தலைவர் கலாபூசணம் எம்.ஏ. பகுர்தீன் தலைமையில் இரு அமர்வுகளாக இடம் பெற்றது.

முதலாவது அமர்வில் கலை கலாசார நிகழ்வுகளோடு, ஊடகவியலாளர், அதிதிகள் கௌரவிப்பும் அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன. இரண்டாவது அமர்வில் புதிய பொதுச்சபை நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

புதிய நிர்வாகத் தெரிவில், எஸ்.எம்.ஹனிபா தலைவராகவும், எம். சினாஸ் செயலாளராகவும், எம்.எப்.எம். நவாஸ் பொருளாளராகவும், நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



# சின்சினாட்டி மாஸ்டர்ஸ் சம்பியனானார் ஜோகோவிச் அல்கராஸை வீழ்த்தினார்!



அமெரிக்காவில் நடைபெற்ற சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் உலகின் முதல்நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிச்சுற்றில், உலகின் இரண்டாம் நிலை வீரரான ஜோகோவிச் 5-7, 7-6 (9/7), 7-6 (7/4) என்ற செட்களில் விம்பிள்டன் நடப்புச் சம்பியனான அல்கராஸைப் போராடி வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம், கடந்த மாதம் கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் இறுதிச்சுற்றில் அல்கராஸிடம் கண்ட தோல்விக்குப் பதிலடி கொடுத்துள்ளார் ஜோகோவிச்.

கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாடுகள் காரணமாக அமெரிக்காவில் கடந்த 2 ஆண்டுகளாக விளையாடாத ஜோகோவிச்சுக்கு, அந்த மண்ணில் இதுவே முதல் போட்டியாகும்.

வெற்றிக்குப் பிறகு பேசிய ஜோகோவிச், 'இதுவரை நான் விளையாடிய போட்டிகளிலேயே எனக்கு மிகவும் உற்சாகமிக்கதாக இருந்த ஆட்டங்களில் இதுவும் ஒன்றாகியுள்ளது. இதை ஒரு கிராண்ட்ஸ்லாம் வெற்றியாக உணர்கிறேன். எனது வாழ்விலேயே மிகக் கடினமான ஆட்டமாக இதை நினைக்கிறேன்.

அல்கராஸ் இத்துடன் விட்டுக் கொடுத்துவிட மாட்டார். அவரிடம் பிடித்ததே அந்தப் போராட்டக் குணம்தான். அவரை மீண்டும் யு.எஸ். ஓபனில் சந்திப்பேன் என நினைக்கிறேன். அது ரசிகர்களுக்கு குதூகலமாக இருந்தாலும், எனக்குக் கடினமாகவே இருக்கும்' என்றார்.

தோல்விக்குப் பிறகு கண்ணீர் விட்டு அழுத அல்கராஸ், பின்னர் பேசுகையில், 'எனது ஆட்டத்துக்காக பெருமையாகவே உணர்கிறேன். டென்னிஸ் விளையாட்டில் எப்போதுமே சிறந்தவராக இருக்கக் கூடிய ஒருவரை தோல்வியின் விளிம்பு வரை கொண்டு சென்றுள்ளேன். கடைசி வரை போராடியே தோற்றாலும், எதற்காக அழுதேன் எனத் தெரியவில்லை. எனது ஆட்டத்தால் ரசிகர்களை திருப்திப்படுத்தியதில் மகிழ்ச்சி. நான் மீண்டு வருவேன்' என்றார்.

இந்தப் போட்டியில் தோல்வி கண்டாலும், அல்கராஸ் உலகின் முதல் நிலை வீரராகவே, எதிர்வரும் கிராண்ட்ஸ்லாம் போட்டியான யு.எஸ். ஓபினிலும் களம் காண்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

சின்சினாட்டி மாஸ்டர்ஸில் மூன்றாவது முறையாகக் கிண்ணத்தை வென்றுள்ள ஜோகோவிச், தற்போது மாஸ்டர்ஸ் போட்டியில் ஒட்டுமொத்தமாக வென்றிருப்பது அவரது 39 ஆவது சம்பியன் பட்டமாகும்.

இது, ஜோகோவிச்சின் டென்னிஸ் வரலாற்றில் அவர் வென்றுள்ள 95 ஆவது பட்டமாகும். இதன் மூலம், ஓபின் எராவில் டென்னிஸில் அதிக முறை சம்பியன் பட்டம் வென்றவர்கள் வரிசையில் அமெரிக்காவின் இவான் லெண்டல்லை பின்னுக்குத் தள்ளி மூன்றாம் இட்தைப் பிடித்துள்ளார் ஜோகோவிச். (04)



# சின்சினாட்டி மாஸ்டர்ஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு கோகோ கௌப் சம்பியன்

சின்சினாட்டி மாஸ்டர்ஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில், போட்டித் தரவரிசையில் 7ஆம் இடத்திலிருந்த அமெரிக்காவின் கோகோ கௌப் 6-3, 6-4 என்ற நேர் செட்களில், செக் குடியரசின் கரோலின் முசோவாவை வீழ்த்தி சம்பியன் ஆனார்.

இந்த ஆட்டம் ஒரு மணி நேரம், 56 நிமிடங்கள் வரை நீடித்தது. இதன் மூலம் தனது முதல் மாஸ்டர்ஸ் கிண்ணத்தை வென்றிருக்கிறார் கௌப். ஒட்டுமொத்தமாக இது அவரது ஐந்தாவது பட்டமாகும்.

கடந்த 55 ஆண்டுகளில் சின்சினாட்டி மாஸ்டர்ஸ் போட்டியில் சம்பியனான முதல் பதின் வயது (19) வீராங்கனை என்ற பெருமையையும் கௌப் பெற்றார். இந்த வெற்றியின் மூலம் சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் மகளிர் பிரிவில் பத்தாவது இடத்துக்கு முன்னேறினார்.

வெற்றிக்குப் பிறகு பேசிய அவர், 'இந்த வெற்றி நம்ப முடியாத ஒன்று. விம்பிள்டனில் முதல் சுற்றிலேயே தோற்று வெளியேறிய பிறகு பல இரவுகள் அழுதேன். எங்கு தவறு செய்கிறேன் என்பதை அறிந்து, அதைத் திருத்திக்கொண்டு வருகிறேன். இன்னும் சிறப்பாக முயற்சி செய்து அடுத்தடுத்த வெற்றிகளைப் பெறுவதற்கு முயற்சிப்பேன்' என்றார். (04)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் அட்டவணையில் இனி மாற்றமில்லை!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடர் இந்தியாவில் ஒக்டோபர் 5 முதல் நவம்பர் 19 வரையில் நடைபெறவிருக்கிறது. இதற்கான திருத்தப்பட்ட அட்டவணை சமீபத்தில் வெளியிடப்பட்டது.

அதன்படி, ஹைதராபாதில் ஒக்டோபர் 9, 10 ஆகிய திகதிகளில் அடுத்தடுத்து ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. அவ்வாறு தொடர்ச்சியாக இரு ஆட்டங்களை நடத்துவது சாத்தியமில்லை என்று ஹைதராபாத் கிரிக்கெட் வாரியம் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் (பிசிசிஜ) தெரிவித்திருந்தது.

ஒக்டோபர் 9 இல் நியூசிலாந்து, நெதர்லாந்து அணிகளும், ஒக்டோபர் 10 இல் பாகிஸ்தான், இலங்கை அணிகளும் ஹைதராபாதில் விளையாடுகின்றன. இந்த நிலையில், தொடர்ச்சியாக இரு ஆட்டங்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதில் சிரமமுள்ளதாக ஹைதராபாத் காவல்துறையும் தெரிவித்திருந்தது.

இதுகுறித்து ஹைதராபாத் கிரிக்கெட் வாரியம் முறையிட, ஆராய்ந்து பதில் அளிப்பதாக பிசிசிஜ தெரிவித்திருந்தது. இந்தநிலையில், உலகக் கோப்பை அட்டவணையில் மாற்றம் செய்ய வாய்ப்பில்லை என பிசிசிஜ அறிவித்துள்ளது. மேலும், பிசிசிஜயின் வழிகாட்டுதலின்படி 4 அணிகளுக்கும் போதிய பாதிகாப்பு வழங்குவதை உறுதிசெய்யுமாறு ஹைதராபாத் கிரிக்கெட் வாரியம் காவல்துறையிடம் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் 7 இல் டில்லியில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக பகலிரவு ஆட்டத்தில் பங்கேற்கும் இலங்கை அணி, ஒக்டோபர் 8 இல் ஹைதராபாத்துக்குச் செல்லவிருக்கிறது.

ஒக்டோபர் 6 இல் ஹைதராபாதில் மோதும் பாகிஸ்தான், நெதர்லாந்து அணிகள், தங்களுடைய அடுத்த ஆட்டத்தையும் அங்கேயே விளையாடுகின்றன.

ஒக்டோபர் 9 இல் நெதர்லாந்தை எதிர்கொள்ளும் நியூசிலாந்து அணி, ஒக்டோபர் 5 இல் தனது முதல் ஆட்டம் முடிந்தவுடனே ஹைதராபாதுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஏற்கெனவே அஹமதாபாதில் நடைபெறும் இந்தியா - பாகிஸ்தான் ஆட்டம் ஒக்டோபர் 15 இல் இருந்து ஒக்டோபர் 14 க்கு மாற்றப்பட்டது. இதனால், ஹைதராபாதில் நடைபெறும் பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கு இடையிலான ஆட்டமும் ஒக்டோபர் 12 இல் இருந்து ஒக்டோபர் 10 க்கு மாற்றப்பட்டது.




இதன் காரணமாக ஒரே சமயத்தில் ராஜீவ் காந்தி மைதானத்தில் நான்கு அணிகள் பயிற்சியெடுப்பது கடினம் எனவும், ஆகவே உலகக் கிண்ண அட்டவணையில் மாற்றம் செய்ய வேண்டும் எனவும் ஹைதராபாத் கிரிக்கெட் வாரியம் தெரிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே அந்தக் கோரிக்கையை பிசிசிஜ நிராகரித்துள்ளது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2023இல் வெளியிடப்பெற்றது.